அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை
கடிதம் 01/2004

எனது இலக்கம்: தா/9/2/2/1/(3)
அரசாங்க நிர்வாக/முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு,
சதந்திர சதுக்கம்,
கொழும்பு -07.

2004.02…23….

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்கள தலைவர்களுக்கும்.

## ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு புறம்பாக அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களுக்கு 55 வயதுக்கு மேல் சேவை ்டிப்பு வழங்குதல்.

மேற்படி விடயம் தொடர்பான 2003-12-16 ஆந் தேதிய 30/96(1) இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பால் தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. குறித்த குற்றறிக்கை ஏற்பாடுகளை பிழையாக வரைவிலக்கணம் செய்து சலுகை கிடைக்க வேண்டிய சில அலுவலர்களுக்கும் சலுகை வழங்கப்படாதுள்ள தென அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

03. 2003-09-17 ஆந் திகதிக்கு முன் ஓய்வுபெற்ற அலுவலர் ஒருவர் தொடர்பில் குறித்த சுற்றறிக்கையின் 1(அ) துணைப்பந்தியின் ஏற்பாடுகள் உரியதாகும் என்பதுடன், 2003-09-17 திகதி அல்லது அதற்குப் பின்னராக ( விருப்பத்துடன் ஓய்வுபெறும் வயது) 55 வயதை அடைகின்ற அலுவலரொருவர் தொடர்பில் சுற்றறிக்கையின் 1(ஆ) துணைப்பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் செயற்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது.

ஒப்பம்: எஸ்.சீ.மான்னப்பெரும.
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
முகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சு.